திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, வளர்ந்து வருகிற பொருளாதாரத்தில் கார்களின் மார்கெட்டுகள் இப்போது அதிகமாகிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே, நம்முடைய அரசாங்கம் ஏதாவது மேல்நாட்டோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, பொதுத்துறையில் லாபம் ஈட்டும் கார் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த விரைவில் முயலுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதை மத்திய அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஆட்டோ மொபைல்ஸ் ஸ்பேர் பார்ட்ஸ் என்ற முறையில் மிகுந்த அளவுக்கு பல ஆண்டுகளாகத் தொழில் வளர்ச்சி மிகுந்து இருக்கிற காரணத்தால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அந்தப் புதிய சிறிய கார் தொழிற்சாலைத் திட்டத்தை பொதுத்துறையில் நம்முடைய மாநிலத்திற்கு தருவது தான் நியாயம் என்று எடுத்துக் கூறியிருக்கிறோம். அப்படித் தருவார்களானால், நம்முடைய அரசாங்கம் அதைப் பங்கேற்று நடத்தத் தயார் என்றும் சொல்லியிருக்கிறோம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, அந்த சிறிய கார் தொழிற் சாலையை ஆரம்பிக்கும் நேரத்தில் கோவை அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு போன்ற அறிவாளிகளின், தொழில் மேதைகளின் அறிவுத் திறன் பயன்படுத்திக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யாருடைய அறிவைப் பயன்படுத்துவதற்கும் தடையில்லை.

Neyveli Lignite for Salem Steel Plant

*802 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to use Neyveli Lignite for Salem Steel Plant ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த நிலக்கரியை கோக்காக மாற்றி இரும்பு செய்வதை விட மின்சாரத்தைப் பயன்படுத்தி உருக் காக்கினால், அந்த உருக்கு எந்த அளவுக்கு சிக்கனமான விலையில் கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மின்சாரம் ஒரு கட்டத்தில் பயன் படுத்தப்பட வேண்டும். இந்த கோல் வெளி மாநிலத்திலிருந்து கொண்டு வரலாம், இந்த இரண்டு கருத்துக்களும் மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக பிராஜக்ட் ரிப்போர்ட்டில் எது பொருத்தமாக இருக்கும், மின்சாரம் உகந்த தாக இருக்குமா, அல்லது பழுப்பு நிலக்கரி உகந்ததாக இருக்குமா, என்று குறிப்பிட்டு இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1964-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையில் நம்முடைய நெய்வேலி லிக்னைட் பயன்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். காரணம் அன்றைக்கு அதிலே சல்பர் ·5 சத விகிதம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. இப்போது பல இடங்களில் நெய்வேலியில் லிக்னைட் எடுப்பதால், இன்றைக்கு ஆராய்ச்சிப்படி, ·77 சதவிகிதத்திலிருந்து 1·72 சதவிகிதம் வரையில் சல்பர் இருப்பதால், லிக்னைட் தேவையில்லை என்ற முடிவிற்கு வந்து விட்டார்கள். இப்போது மின்சாரத்தையும், வெளிமாநிலத்திலிருந்து நிலக்கரியையும் கொண்டு வருவதுபற்றி பரிசீலத்து வருகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்து இருந்தார்கள். அந்த நிலைமை எப்படியிருக்கிறது ? அது செயல்படுமானால், இந்த சல்பர் கண்டன்ட் அதில் குறைவாக இருக்கலாம் அல்லவா? அப்படி வருகிற போது நெய்வேலியிலிருந்து, சேலம் வரையில், இப்போது ஜெர்மனியில் இருக்கும் ரூரல் பெல்ட் மாதிரி சுரங்கம், நிலக்கரியும், இரும்பும் வரக் கூடிய ஒரு பகுதியாக அதை வளர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் அல்லவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நெய்வேலி லிக்னைட்டில் இரண்டா வது கட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று மாநில அரசின் சார்பில் வலியுறுத்தி வருகிறோம். அப்படி ஆரம்பித்ததற்குப் பின்னாலே, மாண்புமிகு அங்கத்தினர் சொன்னதுபோல் சல்பர் கண்டன்ட் குறைவாகக் கிடைக்கு மானால், அதைப் பயன்படுத்துவதைப் பற்றி மத்திய அரசு கவனிக்கும் என்று நம்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்போது நெய்வேலி பழுப்பு நிலக்கரியில் சல்பர் கண்டன்ட் அதிகமாக இருப்பதால் வெளிநாட்டிலிருந்து கோக் கொண்டு வந்தால் காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன் அதிகமாகுமா ? எவ்வளவு வித்தியாசம் இருக்கும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றி மத்திய அரசாங்கம் பரிசீலித்து வருகிறார்கள் என்று சொன்னேன். ஜப்பான் நாட்டிலே இரண் டையும் வெளிநாட்டிலிருந்து பெறுகிறார்கள். அது மட்டுமல்ல, நம்முடைய சேலம், திருவண்ணமலை கனியையும் எடுத்துச் சென்று அங்கே பயன்படுத்த முடியும் என்று சொல்லும்போது மத்திய அரசாங்கம் அது சரியல்ல என்று சொல்லாது என்று நம்புகிறோம்.

1972 மார்ச் 30]

திரு. என். கே. பழனிசாமி : சார் இந்த சேலம் லிக்னைட் விஷயத்தை மத்திய சர்க்கார் மின்சாரத்தை கன்ஷசன் ரேட்டில் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டு இருக்கிறார்களா ? அப்படியானால், சர்க்கார் பதில் என்ன சொன்னார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அவர்கள் சில கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். ஆனால் குறைந்த விகிதத்தில், குறைந்த விலையில் தருவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு என்பதற்கு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு அரசுகளின் கருத்தை வெளியிடுவது சரியல்ல என்று நினைக்கிறேன்.

Iron Deposits in Kavuthimalai Hill.

*803 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that there is an iron indication or deposit in the Kavuthimalai Hill area near Thiruvannamalai in North Arcot District ; and

(*b*) if so, the details thereof and the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் (United Nations Development Programme) உதவியோடு தமிழ்நாடு கனிவள ஆராய்ச்சிப் பிரிவு (Tamil Nadu Mineral Development Project) கவுத்திமலை, வேடியப்பன்மலை மற்றும் திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள பிற மலைகளிலும், சுமார் 140 மில்லியன் டன் இரும்புத் தாதுக்கள் கிடைக்கும் எனக் கண்டுபிடித்துள்ளது. இந்த இரும்புத் தாதுக்களை காந்தத்தின் மூலம் செறிவு படுத்த முடியும் என விரிவான ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வருகின்றது. ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் விவர அறிக்கை தயாரிக்கும் திட்டங்களில் இதையும் ஒன்றாகச் சேர்க்கக் கோரும் இவ்வரசின் கோரிக்கை மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, கவுத்திமலைப் பகுதியை அண்மையில் அமைச்சரவர்கள் சென்று பார்த்தார்கள். அப்போது ஜப்பான் நிபுணர்கள் அங்கே ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன கருத்தை வெளியிட்டார்கள் ? அமைச்சர்கள் இடத்தில் என்ன சொன்னார்கள் ? அதை உடனடியாக ஆரம்பிக்கும் ஏற்பாட்டை அரசு செய்யுமா ?